# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

***************

## <u>ஊடக அறிக்கை</u>

## <u>இலங்கை முதலீட்டு மாநாடு 2021இல் இந்தியாவுக்கான அமர்வு</u>

இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை மையம் ஆகியவை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இலங்கை முதலீட்டு மாநாடு 2021இல் இந்தியாவுக்கான அமர்வானது 2021 ஜூன் ஒன்பதாம் திகதி மெய்நிகர் மார்க்கம் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்ட பேராளர்கள் இந்த நிகழ்வில் உரையாற்றியிருந்தனர். அதேசமயம் இலங்கையில் வெற்றிகரமாக முதலீட்டினை மேற்கொண்டுவரும் 3 இந்திய நிறுவனங்களான HCL, IOCL (LIOC) மற்றும் அசோக் லேலண்ட் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட குழுநிலை விவாதம் ஒன்றும் இங்கு நடைபெற்றிருந்தது.

2. ஸ்திரமானதும் துரிதமானதுமான பொருளாதார வளர்ச்சி மற்றும் பகிரப்பட்ட செழுமை ஆகியவற்றை துரிதப்படுத்துவதற்கு 21 ஆம் நூற்றாண்டில் ஒரு பொருளாதார பங்குடமையை உருவாக்குவதற்கான இந்தியாவின் தயார் நிலையை உயர் ஸ்தானிகர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். துறைமுகங்கள், கப்பல் துறை, பொருள்சார் சேவைகள், தொடர்பாடல், சக்தி/புதுப்பிக்கத்தக்க சக்தி, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல், போக்குவரத்து, சொத்து வியாபாரம், சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயம் போன்ற துறைகள் மீது எதிர்கால பொருளாதார மற்றும் வர்த்தக ரீதியான இருதரப்பு பங்குடைமை கவனம் செலுத்த வேண்டிய தேவை இருப்பதாக அவர் இங்கு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. இலங்கையில் இந்திய முதலீடுகளின் பரந்தளவிலான நோக்கு மற்றும் இயல்பு ஆகியவை தொடர்பாக இந்த சந்தர்ப்பத்தில் தனது கருத்துக்களை தெரிவித்திருந்த உயர் ஸ்தானிகர், தனியார் துறையினரது பங்களிப்பின் முக்கியத்துவம் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியிருந்ததுடன் இருதரப்பினருக்கும் இடையிலான நீண்டகால உறவுகள், பிணைப்பு மற்றும் பரீட்சயம் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கைக்கு மிகவும் சிறந்த பங்காளியாக இந்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் துறை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் இருதரப்பு திட்டங்களை துரிதகதியில் அமுல்படுத்துவதன் ஊடாக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதேவேளை முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் மேம்படுத்த முடியுமென்றும் அவர் தெரிவித்தார். பொருளாதார தொடர்புகளை ஊக்குவிப்பதில் நிலையானதும் எதிர்வு கூறக்கூடியதுமான கொள்கைகள் மிக முக்கியமான விடயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

4. இலங்கையில் இந்திய முதலீட்டின் முக்கியத்துவம் குறித்து இங்கு உரை நிகழ்த்தியிருந்த அமைச்சர் தாரக பாலசூரிய, இந்திய முதலீட்டாளர்களின் தெரிவுகளாக இலங்கையில் காணப்படும் பல்வேறு துறைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார். வாகன உதிரிப் பாகங்கள், ஆடை உற்பத்தித்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை, மருந்து பொருட்கள் மற்றும் கல்வி உள்ளிட்ட துறைகளை அவர் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார். மெலும் கொவிட்-19உடன் தொடர்புடைய மருத்துவ பொருட்கள் விநியோகம், குறிப்பாக 'வக்சின் மைத்ரி திட்டத்தின்" கீழ் விநியோகிக்கப்பட்ட மருந்து பொருட்கள் போன்றவற்றுக்காக இந்தியாவின் ஆதரவுக்கு அமைச்சர் தனது நன்றியை தெரிவித்தார். இந்தியாவுக்கான, இலங்கையின் பதில் உயர் ஸ்தானிகர் திரு.நிலுக கதுருகமுவ மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் துணைத் தலைவர் திரு.விஷ் கோவிந்தசாமி ஆகியோரும் இந்த அமர்வில் உரையாற்றினார்கள்.

5. முதலீட்டாளர்களுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் வரி கட்டமைப்பு தொடர்பாகவும் இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்தும் இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் திரு.பசன் வணிகசேகர இங்கு விளக்கங்களை முன்வைத்திருந்ததுடன் குழு நிலை விவாதத்தின்போது குறித்த மூன்று இந்திய நிறுவனங்களும் இலங்கையில் தமது முதலீட்டு அனுபவம் தொடர்பாகவும் குறிப்பாக பெருநோய் காரணமாக மேலெழுந்திருக்கும் சவால்களுக்கு மத்தியில் இலங்கையில் தமது வர்த்தகத்தினை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் கருத்துக்களை பரிமாறியிருந்தனர்.

****

**கொழும்பு**
10-06-2021